முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள் வியாழக்கிழமை

**E.A.No.3/2024**

**in**

**E.A.No.53/2017**

**in**

**E.P.24/2016**

in

**O.S.No.54/2006**

அய்யன் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பாலுப்பிள்ளை (இறப்பு) .... பிரதிவாதி
2. கோமதி (இறப்பு) .... உத்தேச 2ம் எதிர்மனுதாரர்/ இறந்துபோன பிரதிவாதியின் வாரிசு
3. சங்கரநாராயணன் .... 3ம் எதிர்மனுதாரர்/ இறந்துபோன உத்தேச 2ம் எதிர்மனுதாரரின் வாரிசு

இம்மனுவானது 24.09.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சங்கரநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.ராஜாசிங் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் 151–ன்படி, 3ம் எதிர்மனுதாரரான

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.09 17:06:47 +0530

சங்கரநாராயணன் என்பவரை E.A.No.53/2017 மனுவில் கட்சி சேர்த்து மேற்படி மனுவை மேல்நடத்திக்கொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்திருந்த E.A.No.1/2023 மனு 17.10.2023 ல் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளதை அனுசரித்து இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி E.A.No.53/2017 மனு மற்றும் உறுதிக்கூற்றை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–

இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையை நிறைவேற்றும் பொருட்டு பிரதான நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்து நிலுவையில் இருந்துவந்த நிலையில் இவ்வழக்கின் பிரதிவாதியான பாலுப்பிள்ளை என்பவர் உத்தேச 2ம் எதிர்மனுதாரரான கோமதி என்பவரை மட்டும் அடுத்த வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், ஆதலால் உத்தேச 2ம் எதிர்மனுதாரரை பிரதான நிறைவேறுதல் மனு எண்.24/2016 நடவடிக்கையில் உத்தேச 2ம் எதிர்மனுதாரராக கட்சிசேர்த்து மேற்படி மனுவை மேல்நடத்திக்கொள்ள அனுமதிகோரி வ.வி.எண்.53/2017 என்ற மனுவை தாக்கல் செய்திருந்ததாகவும், இந்நிலையில் உத்தேச 2ம் எதிர்மனுதாரரான கோமதி என்பவரும் 3ம் எதிர்மனுதாரரான சங்கரநாராயணன் என்பவரை மட்டும் அடுத்த வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், ஆதலால் 3ம் எதிர்மனுதாரரான சங்கரநாராயணன் என்பவரை E.A.No.53/2017 மனுவில் கட்சி சேர்த்து மேற்படி மனுவை மேல்நடத்திக்கொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்திருந்த E.A.No.01/2023 மனு 17.10.2023 ல் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதை அனுசரித்து E.A.No.53/2017 மனுவை இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படி சீர்திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடவேண்டியது அவசியமாகவுள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும், ஆகையால், இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி E.A.No.53/2017 மனு மற்றும் உறுதிக்கூற்றை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.10.09 17:06:58 +0530

2. **<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லக்கூடியதில்லை என்றும், மேற்படி மனுவானது மனுதாரரால் உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி மனுவானது இந்த எதிர்மனுதாரரை வீண் அலைக்கழிப்பு செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனு அனுமதிக்கப்பட்டால் இந்த எதிர்மனுதாரருக்கு வீண் அலைச்சலும் பண விரயமும் ஏற்படும் என்றும், எனவே, மனுதாரரின் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது, 3ம் எதிர்மனுதாரரான சங்கரநாராயணன் என்பவரை E.A.No.53/2017 மனுவில் கட்சி சேர்த்து மேற்படி மனுவை மேல்நடத்திக்கொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்திருந்த E.A.No.1/2023 மனு 17.10.2023ல் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளதை அனுசரித்து இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி E.A.No.53/2017 மனு மற்றும் உறுதிக்கூற்றை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மேற்படி E.A.No.1/2023–ல் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 17.10.2023 தேதிய உத்தரவின்படி E.A.No.53/2017 மனுவில் இறந்துபோன உத்தேச 2ம் எதிர்மனுதாரருக்கு சட்டப்படி வாரிசான 3ம் எதிர்மனுதாரரை கட்சி சேர்த்து E.A.No.53/2017 மனுவை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரருக்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.09 17:07:05 +0530

எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **இறுதியாக:–**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.09 17:07:13 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** – இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.09 17:07:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.3/2024 in
E.A.No.53/2017 in
E.P.24/2016 in
O.S.No.54/2006
உத்தரவு (Draft / Fair)
நாள் : 09.10.2025